தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

27.11.2012 P.M

28.11.2012 A.M

## உணவுப் பாதுகாப்புத் தர சட்ட விதிகளில் திருத்தம் வேண்டும்



வியாபாரிகள், விவசாயிகளை பாதிக்கச் செய்யும் "உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006'-ல் உரிய திருத்தங்களை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத்திடம் தமிழக வியாபாரிகள், வர்த்தகர்கள் செவ்வாய்க்கிழமை மனு அளித்தனர்.

மத்திய இணை அமைச்சர் வி. நாராயணசாமி, என்.எஸ்.வி. சித்தன் எம்.பி. ஆகியோர் ஏற்பாட்டில் குலாம் நபி ஆசாத்தை தமிழக வியாபாரிகள் சந்தித்தனர்.

தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.பி. ஜெயப்பிரகாசம், செயலர் எஸ்.வி.எஸ்.எஸ். வேல்சங்கர், தமிழ்நாடு ஹோட்டல் சங்கத்தின் தலைவர் வேங்கடசுப்பு, துணைத் தலைவர் ஸ்ரீநிவாச ராஜா, கௌரவச் செயலர் டி. சீனிவாசன் உள்ளிட்டோர் அமைச்சரிடம் அளித்த மனு விவரம்:

உணவுப் பாதுகாப்புத் தரச் சட்ட விதிகள் வியாபாரிகளையும், விவசாயிகளையும் பாதிக்கச் செய்வதாக உள்ளது.

குறிப்பாக 1954-ம் ஆண்டில் கடைப்பிடிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்புத் தரமே தற்போதும் இருக்க வேண்டும் என்று இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

அன்றைக்குப் பயன்படுத்தப்பட்ட இயற்கை உரம் மற்றும், கடைப்பிடிக்கப்பட்ட தானிய உற்பத்தி முறை வேறு. இன்றைக்கு உள்ள தானிய உற்பத்தி முறை வேறு.

1954-ம் ஆண்டில் நெல் சாகுபடி காலம் 6 மாதங்களாக இருந்தது. இயற்கை உரமும், நன்னீரும் பயன்படுத்தப்பட்டது. பூச்சிகொல்லிகள் பயன்படுத்தப்படவில்லை.

ஆனால், இன்றைக்கு அதே நெல் சாகுபடி மூன்று மாதங்களில் நடத்தப்படுகிறது. ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பூச்சிகொல்லிகள் தெளிக்கப்படுகின்றன. இதனால், உணவுத் தரத்தில் மாற்றம் தவிர்க்க முடியாததாகிறது.

இந்நிலையில், உணவுப் பாதுகாப்புத் தரச் சட்ட விதிகளின்படி, சிறிய காரணங்களுக்குக்கூட 6 மாதங்களில் இருந்து 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், ரூ. 1 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்ட விதிகளில் உரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

மேலும், மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு விஞ்ஞானிகளும், ஒரு பங்கு தயாரிப்பாளர்கள் மற்றும் உணவுப்பொருள் விற்பனையாளர்களும், ஒரு பங்கு விவசாயிகளும் இடம்பெறும் வகையில் இச்சட்டத்தை ஆய்வு செய்வதற்கான புதிய குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து, தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கத்தின் செயலர் எஸ்.வி.எஸ்.எஸ். வேல்சங்கர் கூறுகையில், "உரிய நடவடிக்கை எடுப்பதாக குலாம் நபி ஆசாத் உறுதி அளித்துள்ளார். இது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. சுகாதாரத் துறை இணை அமைச்சர் எஸ். காந்திசெல்வனிடமும் மனு அளிக்கப்பட்டுள்ளது' என்றார்.

## ஓரிரு இடங்களில் மழை வாய்ப்பு

தமிழகம் மற்றும் இலங்கைக்கு இடையில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நிலை கொண்டிருப்பதால் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

வங்கக் கடலின் மத்திய கிழக்குப் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியிருந்தது. இது சில நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவிழந்தது. தொடர்ந்து அதே இடத்தில் நீடித்த இந்த தாழ்வுப் பகுதி, சற்று நகர்ந்து இலங்கைக்கும் தமிழக கடலோரப்

பகுதிக்கும் இடையில் நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தில் சற்று குறைவான மழையே பெய்யும் என்றனர்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி காரைக்காலில் 20 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் பரவலான மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையை பொருத்தவரையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**சூறைக்காற்றில் சாய்ந்த வாழை மரங்கள்**

கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை இரவு திடீரென சூறைக்காற்றுடன் பெய்த மழையில் வாழை, முருங்கை உள்ளிட்டவை சேதம் அடைந்தன.

கடந்த டிசம்பர் மாதம் புயல் வீசியது முதல் கடலூர் மாவட்டத்தில் கடுமையான வெயில் அடித்தது. புதன்கிழமை காலை கடலூரில் வெயில் சுட்டெரித்தது. மாலை 5 மணிக்கு மேல் திடீரென கருமேகம் சூழ்ந்து, இரவு 7 மணியளவில் பலமான சூறைக் காற்று வீசியது.

மண்ணையும், தூசியையும் சூறைக்காற்று வாரி அடித்ததில் சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் சிரமம் அடைந்தனர். அதே நேரத்தில் மழையும் சேர்ந்து அடித்ததால் சாலைகளில் செல்வோர் நிலைகுலைந்து, வீடு திரும்ப முடியாமல் அவதிப்பட்டனர். மழை நின்றும் நீண்ட நேரம் மின்னல் நீடித்தது.

இதனால் விளம்பர டிஜிட்டல் பேனர்கள் முறிந்து விழுந்தன. சில டிஜிட்டல் பேனர்கள், அவை கட்டப்பட்டு இருந்த கழிகள் முறிந்து அருகில் இருந்த மின் கம்பிகளின் மீது விழுந்ததில் மின் கம்பிகள் அறுந்தன.÷மின் கம்பிகள் அறுந்ததால் கடலூர், முதுநகர் உள்ளிட்ட பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது.

வாழைகள் சேதம்: கடலூர் மற்றும் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வாழை, முருங்கை உள்ளிட்ட முறிந்து விழுந்து சேதம் அடைந்தன. ÷கடலூர் ஒன்றியம் மலை கிராமங்களான ராமாபுரம், வடக்கு ராமாபுரம், சாத்தங்குப்பம், வழிசோதனை பாளையம், வண்டிக்குப்பம் உள்பட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாராக இருந்த

ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் முறிந்து சாய்ந்து விட்டன. கரும்பு பயிர்களும் காற்றில் சாய்ந்து சேதம் அடைந்தது.

புயல் பாதிப்பு, மழையின்மை, மின்வெட்டு, தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கு இடையே பயிர் செய்யப்பட்ட வாழை, கரும்பு, முருங்கை உள்ளிட்ட தோட்டப் பயிர்கள் சூறைக்காற்றால் சேதம் அடைந்ததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

**வேளாண் விளைபொருள் ஏற்றுமதி முடங்கும் அபாயம்**

சென்னைத் துறைமுகம் வழியாக நடைபெற்று வரும் வேளாண் விளைபொருள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் படிப்படியாக முடங்கி வருவதாக ஏற்றுமதியாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

வேளாண் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு ஆய்வு செய்து சான்று வழங்க வேண்டிய தாவரப் பாதுகாப்புத் துறையினர் தேவையற்ற காலதாமதம் செய்வதே இதற்குக் காரணம் என அவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

ஆண்டுக்கு 2.60 லட்சம் கன்டெய்னர்கள்: சென்னைத் துறைமுகத்தில் ஆண்டுக்கு 2.6 லட்சம் கன்டெய்னர்கள் கையாளப்படுகின்றன. இதில் வேளாண் விளைபொருள்களின் பங்கு கணிசமான அளவில் உள்ளது.

மக்காச்சோளம், வெங்காயம், அரிசி, மிளகாய், வேர்க்கடலை உள்ளிட்டவை மட்டும் ஆண்டுக்கு சுமார் 2 லட்சம் கன்டெய்னர்கள் வரை சென்னைத் துறைமுகம் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதேபோல் மரங்கள், மரக் கட்டைகள், ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட பழ வகைகள், உளுந்து, துவரை, பட்டாணி, சுண்டக் கடலை உள்ளிட்ட பருப்பு வகைகள், அலங்காரப் பூக்கள் என ஆண்டுக்கு சுமார் 60 ஆயிரம் கன்டெய்னர்கள் வரை உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. மொத்தத்தில் வேளாண் வர்த்தகம் மூலம் ஆண்டுக்கு பல ஆயிரம் கோடிக்கு வெளிநாட்டு வர்த்தகம் நடைபெற்று வருகிறது.

ஆய்வுச் சான்று வழங்கும் தாவரப் பாதுகாப்புத் துறை: வேளாண் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் முன்பு மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் உள்ள தாவரப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் சோதனை செய்து சான்று அளிக்க வேண்டும். இந்த சட்டப்பூர்வமான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமல் எந்த கன்டெய்னரையும் எடுத்துச் செல்ல சுங்கத்துறை அதிகாரிகள் அனுமதிக்கமாட்டார்கள்.

தாவரப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் சான்று வழங்கும் நடைமுறைகளில்தான் தற்போது தேவையற்ற கால தாமதம் ஏற்படுவதாகவும், முன்பு ஓரே நாளில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தற்போது ஐந்து நாள்கள் வரை காலதாமதம் ஆகின்றன. இதற்கு அதிகாரிகள் தரப்பில் தெளிவான பதில் இல்லாத நிலையில் வேளாண் விளைபொருள் ஏற்றுமதி விரைவில் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என வர்த்தகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஏற்றுமதி முடங்கினால் விவசாயிகள் பாதிக்கப்படுவர்: இது குறித்து சென்னை மக்காச்சோளம் ஏற்றுமதியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறியது:

வேளாண் பொருள்கள் ஏற்றுமதி மூலம் விவசாயிகளுக்கு லாபகரமான விலை கிடைத்து வருகிறது. ஏற்றுமதியில் லாபம் குறைவுதான் என்றாலும் அதிக அளவில் ஏற்றுமதி செய்வதால் பரவாயில்லை என்ற நிலை இருந்துவந்தது. ஏற்கெனவே கண்டெய்னர் போக்குவரத்து நெரிசல் பிரச்னையால் இத்தொழில் நலிவடைந்து விட்டது. இந்நிலையில் தாவரப் பாதுகாப்புத் துறையினர் தற்போது மேற்கொண்டுள்ள நடைமுறைகளால் இத்தொழில் முற்றிலும் முடங்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கன்டெய்னருக்கு சராசரியாக ரூ. 5 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரை மட்டுமே லாபம் கிடைத்து வந்த நிலையில், தற்போதைய பிரச்னையால் இந்த லாபத்தையும் இழந்து விட வேண்டியதுதான். எனவே இது குறித்து வர்த்தத் துறை அமைச்சகம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றனர்.

இப்பிரச்னை குறித்து வெங்காயம் ஏற்றுமதி செய்யும் கிருபாகரன் கூறியது:

தாமதத்தினால் வெங்காயம் அழுகிவிடும் எனவும், அதிகரிக்கும் செலவினங்களால் மக்காச்சோளம் உள்ளிட்ட ஏற்றுமதி, இறக்குமதி முடங்கும் அபாயம் உள்ளது என விளக்கமாக எடுத்துரைத்தாலும் பயன் இல்லை. அதைப் பற்றி தங்களுக்கு கவலை இல்லாததுபோலவும், அதிகாரத்தைச் செயல்படுத்துவது மட்டுமே தங்களது கடமையாகவும், இங்கு கேள்வி கேட்பதற்கு இடமில்லை என்ற மனப்பான்மைதான் இந்த அதிகாரிகளிடம் நிலவுகிறது.

இரண்டு மாதங்கள் முன்புவரை இல்லாத பிரச்னைகள் இப்போது மட்டும் ஏன்? இதற்கான காரண காரியங்கள் தாவரப் பாதுகாப்புத் துறை மண்டல அதிகாரிகளுக்கு நன்றாகவே தெரியும். இப்பிரச்னை குறித்து இத்துறையின் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தினால் பல்வேறு விஷயங்கள் வெளிச்சத்திற்கு வரும் என்பதே உண்மை என்றார் கிருபாகரன்.

கன்டெய்னர் லாரிகள் நெரிசல், போதிய கிடங்கு வசதிகள் இல்லாமை, சர்வதேசப் போட்டி உள்ளிட்ட பிரச்னைகளால் சென்னைத் துறைமுகம் மூலம் நடைபெற்று வந்த வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்நிலையில் தாவரப் பாதுகாப்புத் துறையின் மெத்தனத்தால் மேலும் பாதிக்கும் அபாயம் உள்ளது.

## ஆவின் ஸ்மார்ட் கார்ட் : முதல் கட்டமாக அண்ணா நகரில் விநியோகம்



ஆவின் பால் விநியோகத்தில் முறைகேடு நடைபெறுவதை தடுக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஆவின் ஸ்மார்ட் கார்டை சென்னையில் செவ்வாய்க்கிழமை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி வெளியிட்டார்.

ஆவின் பால் அட்டையில் நடைபெறும் முறைகேட்டை தடுக்கும் வகையில் ஆவின் சந்தாதாரர்கள் அனைவருக்கும் ஸ்மார்ட் கார்ட் வழங்கப்படும் என கடந்த ஆண்டு ஆவின் நிர்வாகத்தினர் அறிவித்திருந்தனர். அதற்கான பணியை ஆவின் நிர்வாகத்தினர், சிட்டி யூனியன் வங்கியுடன் இணைந்து மேற்கொண்டு வந்தனர். தற்போது ஸ்மார்ட் கார்ட் பணி முடிவடைந்தது.

இதையடுத்து சென்னையில் செவ்வாய்க்கிழமை பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி ஸ்மார்ட் கார்டை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து ஆன்லைனில் மாதாந்திர அட்டையைப் புதுப்பிக்கும் இணையதளத்தையும் தொடங்கி வைத்தார்.

பின்னர் இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது:

ஆன்லைன் பதிவு: நுகர்வோர் மாதாந்திர பால் அட்டையை இணையதளம் வழியாக ஹஹஸ்ண்ய்ம்ண்ப்ந்.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற முகவரியில் புதுப்பித்துக் கொள்ளலாம். அதில் தங்களுடைய பெயர், இருப்பிட முகவரி, புதுப்பிக்கப்பட வேண்டிய பால் அட்டைகள் விவரம், மின் அஞ்சல் முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்ய வேண்டும்.

இதையடுத்து ஆவின் வாடிக்கையாளர் அடையாள எண், மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படும். இந்த வாடிக்கையாளர் எண்ணை உபயோகித்து நுகர்வோர்கள் அந்தந்த மாதத்திற்கான

மாதாந்திர பால் அட்டைகளைப் புதுப்பித்துக் கொள்ளலாம். இணையதளத்தில் புதுப்பிக்கும் சந்தாதாரர்கள் தங்களின் அடையாள எண்ணை குறிப்பிட்டு மாஸ்டர், விசா அட்டைகள் மூலம் பணம் செலுத்தலாம். பால் வாங்கும் டெப்போவில், பழைய பால் அட்டை மற்றும் இணையதளம் மூலம் பணம் செலுத்தியதற்கான ரசீது ஆகியவற்றை ஒப்படைத்து புதிய பால் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த வசதி டிசம்பர் 1-ம் தேதி முதல் செயல் முறைக்கு வரும். மாதம்தோறும் 1-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை ஆன் லைனில் புதுப்பித்துக் கொள்ளலாம்.

ஆன்லைன் புதுப்பிக்க கட்டணம்: ஆன்லைனில் பால் அட்டைகளைப் புதுப்பிக்க நடைமுறை கட்டணமாக ஒரு லிட்டர் வரை ரூ.10-ம், 2 லிட்டர் வரை ரூ.20-ம், 3 லிட்டர் வரை ரூ.30-ம் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் கார்டு: இணையதளம் மூலம் பதிவு செய்யும் நபர்களுக்கு ஆவின் ஸ்மார்ட் கார்ட் வழங்கப்படும். இந்த கார்டை பயன்படுத்தி ஆவின் பால் அட்டையை பெற்றுக் கொள்ளலாம். ஏற்கெனவே ஸ்மார்ட் கார்டுக்காக விண்ணப்பித்திருந்தாலும் அவர்கள் ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். அப்போது ஏற்கெனவே இருக்கும் விண்ணப்பத்தையும் ஆன்லைன் பதிவையும் சரிபார்த்து அதன் பின்னர் ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும்.

ஆவின் ஸ்மார்ட் கார்ட் முதல் கட்டமாக அண்ணா நகரில் டிசம்பர் 1-ம் தேதியில் இருந்து விநியோகிக்கப்படும். அதைத் தொடர்ந்து படிப்படியாக சென்னை மண்டலத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியின் போது, பால் வளம் மற்றும் மீன் வளத்துறை அரசுச் செயலர் ககன்தீப்சிங் பேடி, ஆவின் நிர்வாக இயக்குநர் தா.கி.ராமச்சந்திரன் மற்றும் சிட்டி யூனியன் வங்கி அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

27th nov 2012 P.M

**விதை கிராம திட்ட பயிற்சி முகாம்**

திருக்கோவிலூர் அருகே வடகரைத்தாழனூர் கிராமத்தில் விதை கிராம திட்டப் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை இணை இயக்குநர் சேகர் முகாமுக்கு தலைமை தாங்கினார். உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தார்.

உயர் மகசூலுக்கு தரமான வீரிய சான்று விதைகள் பயன்படுத்துவது மற்றும் விதை உற்பத்தியில் அதிகம் லாபம் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

வேளாண்மை அலுவலர்கள் சரவணன், ஆரோக்கியராஜ், ஊராட்சித் தலைவர் சரசு ரங்கநாதன்,

ஒன்றியக்குழு உறுப்பினர் தெய்வசிகாமணி, துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவநேசன், வெங்கடகிருஷ்ணன், செந்தில்குமார், சிவக்குமார், வெங்கடேசப்பெருமாள், திருமலை உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

## சம்பா நெல் விவசாயிகள் டிச.15 வரை காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம்

சம்பா நெல் பயிரிடும் விவசாயிகள் காப்பீட்டுத் திட்டத்தில் சேர டிசம்பர் 15 ஆம் தேதி கடைசி நாள் என்று தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

இது குறித்து அந் நிறுவனத்தின் மண்டல மேலாளர் பாரதி வஜ்ஜிரவேலு திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: பல ஆண்டுகளாக நம் மாநிலத்தில் பயிர்களுக்கு தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சம்பா நெற்பயிருக்கு இத் திட்டத்தில் பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் சேரலாம். இதற்கான கடைசி நாள் டிசம்பர் 15. சம்பா நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு மொத்த மதிப்பு ரூ.8,692 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு பயிர்க்கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ஒரு ஏக்கருக்கு ரூ.78 மட்டுமே.

ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ரூ.87. பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் பிரீமியத்தைச் செலுத்த சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெற்று முன்மொழிவுப் படிவத்துடன் அவரவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் செலுத்தி ரசீது பெறலாம்.

இத் திட்டத்தில் கூடுதல் மதிப்பாக சம்பா நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.7,604 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ஒரு ஏக்கருக்கு ரூ.465. ஏனைய விவசாயிகள் ரூ.517 செலுத்த வேண்டும். இக் கூடுதல் மதிப்புக்கான பிரீமியத்தை விவசாயிகள் தங்கள் விருப்பத்தின்பேரில் செலுத்தலாம்.

முன்மொழிவுப் படிவங்களை அருகில் உள்ள வேளாண்துறை அலுவலகங்களிலோ, கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கியிலோ பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர் அலுவலகத்துக்கு 044-43403400-3416 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**பாலக்கோட்டில் கரும்பு அரைவைப் பணி தொடக்கம்**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் திங்கள் கிழமை அரைவைப் பணி தொடங்கியது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பாலக்கோடு, திம்மனஅள்ளி கிராமத்தில் உள்ள தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பு அரைவைப் பருவத்தை கே.பி.அன்பழகன் எம்எல்ஏ தொடக்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் டி.ஆர்.அன்பழகன், தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி, மாநிலச் செயலாளர் ராமகவுண்டர், தனி அலுவலர் கா.முருகவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

2012-13-ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் 11,796 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 2.50 லட்சம் டன் கரும்பு அரைவை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி தினசரி 2 ஆயிரம் டன் கரும்பு அரைவை செய்யப்படும். உறுப்பினர்களின் கரும்புத் தோட்டத்திலிருந்து ஆலைக்கு அரைவைக்காக கரும்புகளைக் கொண்டு வர 65 லாரிகள், 77 டிராக்டர்கள், 74 டயர் வண்டிகள் மற்றும் 8 டிப்பர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளன.

கரும்பு பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தங்களது பதிவு, வெட்டு உத்தரவு முன்னுரிமை ஆகிய விவரங்களை அறிய ஜ்ஜ்ஜ்.ற்ய்ஸ்ரீள்ச்.ய்ங்ற்.ண்ய் என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் என்றார் மாவட்ட ஆட்சியர்.

**பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் கடன் பெற விண்ணப்பிக்கலாம்**

நாமக்கல் மாவட்டத்தில் வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பயிர்க் கடன் பெற விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து வேளாண் காப்பீட்டுத் திட்ட மண்டல மேலாளர் பாரதி வஜ்ஜிர வேலு திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நமது மாநிலத்தில் பல பயிர்களுக்கு தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நஷ்டஈடு வழங்கப்பட்டு உள்ளது. நிகழாண்டு (2012) சம்பா நெல்பயிருக்கு இந்தத் திட்டத்தில் பயிர்க் கடன் பெற விவசாயிகள் சேருவதற்கான கடைசி தேதி வரும் டிசம்பர் மாதம் 15-ம் தேதி ஆகும்.

சம்பா நெல்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு மொத்த மதிப்பானது ரூ.8 ஆயிரத்து 692 ஆகும். இதற்கு பிரீமியமாக பயிர்க் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ரூ.78 ஆகும். ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ரூ. 87 ஆகும். பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் பிரீமியத்தை செலுத்த சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெறப்பட்டு முன்மொழிவு படிவத்துடன் அவரவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே பிரீமியத்தை செலுத்தி ரசீது பெற்று கொள்ளலாம். இந்தத் திட்டத்தில் கூடுதல் மதிப்பாக சம்பா நெல்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.7 ஆயிரத்து 604 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு கடன் பெறா சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ரூ.465 ஆகும். ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ.517 ஆகும். இந்தக் கூடுதல் மதிப்பிற்கு பிரீமியம் விவசாயிகள் தாங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம்.

முன்மொழிவுப் படிவங்களை அருகில் உள்ள வேளாண் துறையிலோ, கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கியிலோ கேட்டு பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவ. 30-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாமக்கல் மாவட்டத்தில் நவம்பர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வருகிற வெள்ளிக்கிழமை (நவ.30) காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் எனது தலைமையில் நடைபெறுகிறது என நாமக்கல் மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அவ்வமயம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## "வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் '

நவீன வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார் தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ந. சுப்பிரமணியன்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் ஆத்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டம் மண்டல முன்பருவ முனைப்பு இயக்க விழா முருகையா மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தலைமை வகித்தார்.

விழாவில் பங்கேற்று 91 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சத்து 34 ஆயிரத்து 997 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் சுப்பிரமணியன் பேசியது:

வேளாண்மைத்துறை சார்ந்த ஆத்மா விரிவாக்க சீரமைப்புத்திட்டம் முன்பருவ முனைப்பு இயக்கம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு நல உதவிகள் அளிக்கப்படுகிறது. வேளாண்துறைக்கென அதிக நிதியை ஒதுக்குவதில் தமிழகம் சாதனை படைத்து வருகிறது. விவசாயத்தைப் பொறுத்தவரையில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை ஆர்வத்துடன் அறிந்து கொண்டு அதை நடைமுறைப்படுத்த விவசாயிகள் முன் வரவேண்டும். வேளாண்துறை சார்ந்த படிப்பை முடித்த இளைஞர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். விவசாயத்தை ஊக்குவிக்க தமிழக அரசு மானிய விலைக்கு உரங்களை வழங்குகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்தி பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்றார்.

முன்னதாக,வேளாண்துறையின் அனைத்துப்பிரிவுகள் சார்பில் அமைக்கப்பட்ட கண்காட்சியை திறந்து வைத்து,பயிர் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த கையேட்டை அமைச்சர் வெளியிட்டார்.

விழாவில் திருச்சி தொகுதி மக்களவை உறுப்பினர் ப. குமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் விராலிமலை சி.விஜயபாஸ்கர், ஆலங்குடி கு.ப. கிருஷ்ணன், புதுக்கோட்டைவீ.ஆர்.

கார்த்திக்தொண்டைமான், அறந்தாங்கி மு. ராஜநாயகம்,மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.சி. ராமையா, ஒன்றியக்குழுத் தலைவர்கள் பே. சின்னப்பா, கெங்கையம்மாள்சொக்கலிங்கம், ஜெயஇளங்கேஸ்வரன், கோட்டாட்சியர் சி. முத்துமாரி, உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக, கந்தர்வகோட்டை வேளாண் உதவி இயக்குநர் அ. ரவீந்திரன் வரவேற்றார். உதவி இயக்குநர் ராமசிவகுமார் நன்றி கூறினார்.

## பொன்னன்குறிச்சியில் விவசாயிகளுக்கான பயிற்சி

ஸ்ரீவைகுண்டம் வட்டாரத்துக்குள்பட்ட பொன்னன்குறிச்சியில் மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

அட்மா திட்டத்தின் சார்பில் நடைபெற்ற பயிற்சிக்கு பொன்னன்குறிச்சி ஊராட்சித் தலைவர் ஆனந்த லதா தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் தன்ராஜ் திருந்திய நெல் சாகுபடி குறித்தும், வாகைகுளம் ஸ்கேடு உதவி பேராசிரியர் அசோக்குமார் நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். ஸ்ரீவைகுண்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செந்தூர்குமார், துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன் ஆகியோர் பல்வேறு வேளாண்மை திட்டப்பணிகள் குறித்தும் விவசாய தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கமளித்து பேசினர்.

உதவி வேளாண்மை அலுவலர் நடராஜன் நன்றி கூறினார். பயிற்சி வகுப்பில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரைப் பெற்றுத் தர வேண்டும் : விவசாயிகள்

மேட்டூர் அணையின் நீர் மட்டம் குறைந்து வருவதால் சம்பா சாகுபடி நெற்பயிர்களைக் காக்க காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரைப் பெற்றுத் தர வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47.61 அடியாக குறைந்திருப்பதால், அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு 12 ஆயிரம் கன அடியில் இருந்து 2 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. எனவே, காவிரியில் கர்நாடக அரசு தமிழகத்துக்குத் தர வேண்டிய தண்ணீரை அளித்தால்தான் சம்பா சாகுபடியை மேற்கொள்ள முடியும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**விவசாயத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த கொள்கை அவசியம் : பிரணாப்**



விவசாயத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த புதிய கொள்கை அவசியம் என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வலியுறுத்தினார்.

பஞ்சாப் வேளாண் பல்கலையின் பொன் விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச வேளாண் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் ஸ்திரமான விவசாய வளர்ச்சி மற்றும் உணவு பாதுகாப்பு குறித்த கருத்தரங்கை செவ்வாய்க்கிழமை பிரணாப் முகர்ஜி தொடங்கி வைத்து பேசியதாவது: வேளாண் துறை வளர்ச்சிக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இத்துறைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டிய கால கட்டம் உருவாகியுள்ளது. விவசாய வளர்ச்சிக்குத் தேவையான ஒருங்கிணைந்த கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும். இந்த விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும். வேளாண் துறையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளை கண்காணித்து இத்துறை வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும்.

மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் ஓரளவாவது பயனளிக்க வேண்டுமெனில் அதை திறம்பட செயல்படுத்த வேண்டும். இதற்கு கீழ் நிலையிலிருந்து ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியம்.

விவசாய திட்டப் பணிகளில் எந்தெந்த நிலைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை உன்னிப்பாகக் கவனித்து அந்தந்த நிலைகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்துவதன் மூலம் நிர்ணயித்த இலக்கை எட்ட முடியும் என்றார் பிரணாப் முகர்ஜி.

## உள்ளூர் தொலைக்காட்சி மூலம் விவசாயிகளுக்கு நெல் , மிளகாய் சாகுபடி விளக்கம்

ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் அவார்டு தொண்டு நிறுவனம் ஆகியவை ஏற்பாட்டின்பேரில் விவசாயிகளுக்கு, உள்ளூர் தொலைக்காட்சி மூலம் நெல், மிளகாய் சாகுபடி குறித்து சனிக்கிழமை விளக்கம் அளிக்கப்பட்டது.

முதுகுளத்தூரில் உள்ள எம்ஜிஏ என்னும் உள்ளூர் தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம் கமுதி, முதுகுளத்தூர், கடலாடி ஆகிய தாலுகாக்களில் 23 ஊர்களைச் சேர்ந்த விவசாயி கள் பயன் அடையும்படி இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

நெல், மிளகாய், பருத்தி ஆகிய பயிர்கள் சாகுபடி முறை, பூச்சி மேலாண்மை, உரம் மேலாண்மை, விதை நேர்த்தி, நீர்ப்பாசன மேலாண்மை உள்ளிட்ட விவரங்கள் பற்றி, தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம் விளக்கப்பட்டது. ராமநாதபுரம் மாவட்டப் பணி ஓய்வு வேளாண்மை இணை இயக்குநர் மகாலிங்கம் நிகழ்சியில் பங்கேற்று, விவசாயிகளுக்கு விளக்கம் அளித்ததோடு, செல்போன் மூலம் விவசாயிகள் கேட்ட சந்தேகங்களுக்கு உடனுக்குடன் தகுந்த விளக்கம் அளித்தார்.

நிகழ்ச்சியில் புஷ்பவனம் விவசாயி மிக்கேல் என்பவரை நேரில் வரவழைத்து, வே ளாண்மை சந்தேகங்கள் குறித்து நேருக்கு நேர் உரையாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

## மேட்டூரில் 10 நாள்களுக்கு மட்டுமே நீர் இருப்பு : சம்பா , தாளடிக்கும் ஆபத்து

காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி நெல் பயிர்களுக்கு ஜனவரி மாதம் வரையிலும் தண்ணீர் தேவைப்படும் நிலையில், மேட்டூர் அணையில் இருந்து மேலும் 10 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கக் கூடிய சூழல் உள்ளது. இதனால், சம்பா, தாளடி நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். ஆனால், கர்நாடகத்தில் இருந்து போதுமான அளவு தண்ணீர் கிடைக்காததால், 3 மாதம் தாமதமாக கடந்த செப்டம்பர் 17ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. பருவ மழையை எதிர்நோக்கியும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் வழங்க வேண்டிய தண்ணீரைக் கணக்கில் கொண்டும் மேட்டூர் அணையைத் திறக்க தமிழக அரசு முடிவு செய்தது.

தாமதமாக அணை திறக்கப்பட்டதால் ஜூன், ஜூலை மாதங்களில் நடவு செய்யப்படும் குறுவை நெல் சாகுபடி வெகுவாகப் பாதித்தது. கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் சாகுபடி செய்த சில விவசாயிகள் குறுவையைத் தொடர்ந்து தாளடி நெல்லைப் பயிரிட்டுள்ளனர். குறுவையால் ஏற்பட்ட இழப்பை மறந்து சம்பா நெல் சாகுபடி மூலம் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள முயன்ற லட்சக்கணக்கான டெல்டா விவசாயிகள், முழுவீச்சில் பாடுபட்டு வருகின்றனர்.

சம்பா நெல் பயிர்கள் நடவு முடிந்து பல இடங்களில் ஏறத்தாழ ஒரு மாதமே ஆகியுள்ளது. முன்

கூட்டியே பயிரிட்ட சில இடங்களில் நெல் பயிர்களில் இருந்து கதிர் வெளியே வரத் தொடங்கியுள்ளது. இந்த விவசாயிகளுக்கு குறைந்தது ஜனவரி 15ஆம் தேதி வரையிலும் தண்ணீர் தேவைப்படுகிறது அல்லது அடுத்த 30 நாள்களுக்கு தண்ணீர் கிடைத்தாலும் ஆழ்துளைக் கிணறுகள், பம்பு செட்டுகள் மூலம் மேலும் தண்ணீர் தேவையை நிறைவு செய்து கொள்ளக்கூடிய நிலையில் உள்ளனர்.

ஆனால், இவர்களுக்கு பெரும் அதிர்ச்சியூட்டும் விதமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து செப்டம்பர் 17 முதல் விநாடிக்கு சுமார் 12 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. கர்நாடகத்தில் இருந்து நீர்வரத்து ஏதும் இல்லாத நிலையில், தொடர்ந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டதால் நீர்மட்டம் 84 அடியில் இருந்து திங்கள்கிழமை 48 அடியாகக் குறைந்தது.

இந்த நிலையில், நீர்மட்டம் வேகமாகக் குறைவதைக் கருத்தில் கொண்டு தண்ணீர் திறப்பு ஞாயிற்றுக்கிழமை 10 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. அணையில் இப்போது 16.67 டி.எம்.சி. மட்டுமே தண்ணீர் உள்ளது. சராசரியாக நாளொன்றுக்கு ஒரு டி.எம்.சி. வீதம் தண்ணீர் குறைந்து வருகிறது. இதே நிலை நீடித்தால், மேலும் 10 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்க முடியும் என்று பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், லட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள சம்பா, தாளடி நெல் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகும் அபாயம் ஏற்படும். இதன்மூலம், ஏற்கெனவே குறுவையால் பாதிக்கப்பட்டு, இப்போது நம்பிக்கையுடன் சம்பா, தாளடி நெல் பயிரிட்டுள்ள டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது.

**கரையோர விவசாயிகள் மகிழ்ச்சி**

மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைவதால், அணையின் கரையோரப் பகுதிகளை ஒட்டியுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், அதன் நீர்ப்பிடிப்பு பரப்பு தருமபுரி மாவட்டம் வரையிலும் நீண்டுள்ளது. சுமார் 59.25 சதுர மைல் அளவுக்கு (37,750 ஏக்கர்) அணையின் தண்ணீர் பரவிக் கிடக்கும். அணை முழு கொள்ளளவை எட்டும் நேரத்தில் சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒகேனக்கல் வரையிலும் தண்ணீர் தேங்கி நிற்கும் என்று கூறப்படுகிறது. அப்போது அணையைச் சுற்றிலும் உள்ள கொளத்தூர், கீரைக்காரனூர், கூனாண்டியூர், வத்தல்பட்டி, கொண்டையனூர், நாகமரை, ஏமனூர், பாலாறு, கோட்டையூர், பண்ணவாடி, மூலக்கடை அதன் சுற்றுப் பகுதிகளில் உள்ள பல குக்கிராமங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலத்தில் நீர் சூழ்ந்திருக்கும். பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இந்த நிலத்தில் மோட்டார் பம்பு செட்டுகளை பயன்படுத்தாமல் விவசாயம் செய்து கொள்ள அதிகாரிகள் தடை ஏதும் கூறுவதில்லை. இதனால், அணையின் நீர்மட்டம் குறையும் நேரங்களில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் குறுகிய காலப் பயிர்களாக

நிலக்கடலை, சோளம், கால்நடைகளுக்கான தீவனப்புல் உள்ளிட்டவற்றை பயிர் செய்து பயனடைகின்றனர்.

பண்ணவாடி பரிசல் துறையை ஒட்டியுள்ள பகுதிகளில் குறுகிய கால நெல் பயிரிடப்படுகிறது. ஆண்டு முழுவதும் நீரில் அடித்துவரப்பட்ட வண்டல் மண், மீன்களின் கழிவுகளால் வளம் செறிந்திருக்கும் இந்த மண்ணில் செயற்கை உரம் ஏதுமின்றியே பயிர்கள் செழித்து வளருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பண்ணவாடி பரிசல் பகுதியில் நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் கனகா, இந்திராணி கூறியது: மேட்டூர் அணையின் நீர்மட்டம் இப்போது 50 அடிக்கு குறைந்துள்ளதால், அணையின் கரையோரங்களில் வேளாண் பணிகள் தீவிரமடைந்துள்ளன. டிராக்டர் மூலம் உழுது, நடவுப் பணிகளைத் தொடங்கியுள்ளோம். கோடை மழை வருவதற்கு முன்பு அல்லது தென் மேற்குப் பருவமழை தொடங்கும் முன்பு இரண்டு போகம் சாகுபடி செய்துவிடலாம் என்றனர் அவர்கள்.

**கர்நாடகம் இன்னும் 126 டி.எம்.சி.**

**தண்ணீரை திறந்துவிட வேண்டும்**

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி, ஆண்டுதோறும் ஜூன் 1ஆம் தேதி முதல் மே 31ஆம் தேதி வரையிலும் 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தமிழகத்துக்கு வழங்க வேண்டும். (ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடி தண்ணீராகும்).

இதன்படி, ஜூன் 1ஆம் தேதி முதல் நவம்பர் 25ஆம் தேதி வரையிலும், தமிழகத்துக்கு 180.35 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் வழங்கியிருக்க வேண்டும். ஆனால், 54.07 டி.எம்.சி. மட்டுமே வந்துள்ளது. மேலும், 126.28 டி.எம்.சி. வர வேண்டியுள்ளது. இந்த நிலையில், ஜூன் முதல் செப்டம்பர் வரை விடப்பட வேண்டியதில் நிலுவையில் உள்ள 52.80 டி.எம்.சி. தண்ணீரையாவது வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது. இதற்கிடையே, காவிரி டெல்டா மாவட்டப் பாசனத்துக்காக மேட்டூரில் இருந்து ஞாயிற்றுக்கிழமை வரையிலும் 59.28 டி.எம்.சி. தண்ணீர் விடப்பட்டுள்ளது. அணை மூடப்படும் நாளான ஜனவரி 28 வரையிலும் மேலும் குறைந்தது 60 டி.எம்.சி. தண்ணீராவது இருந்தால் மட்டுமே பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகளை அலைக்கழிக்கும் நெல் வியாபாரிகள்

தஞ்சை மாவட்டத்தில் தனியார் வியாபாரிகளிடம் தங்களது நெல்லை விற்பனை செய்த குறுவை விவசாயிகள் பலர், தங்களுக்கு அதற்கான பணத்தை வழங்காமல் அலைக்கழிப்பதாக புகார் தெரிவிக்கின்றனர்.

மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைவாக இருந்ததால், நிகழாண்டு ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறக்கவில்லை.

எனவே, டெல்டா மாவட்டங்களில் நிகழாண்டு இயல்பான பரப்பளவில் 50 சதவீதம் மட்டுமே

குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. அதுவும் மோட்டார் பம்ப்செட் வசதி உள்ள விவசாயிகள்தான் சாகுபடியை மேற்கொண்டனர்.

செப்டம்பர் மாதம் தொடங்கிய குறுவை அறுவடை, அக்டோபர் மாதம் வரை தொடர்ந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஹெக்டேருக்கு 6.6 டன் மகசூல் கிடைத்தது. குறுவை சாகுபடி மேற்கொண்ட விவசாயிகளின் வயலுக்கு தனியார் வியாபாரிகள் நேரில் சென்று, நெல் மூட்டைகளைக் கொள்முதல் செய்தனர்.

தொடக்கத்தில் நெல்லுக்கு கூடுதல் விலை கொடுத்த வியாபாரிகள், பல இடங்கலில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்காததால், அவர்களது கொள்முதல் விலையைக் குறைக்கத் தொடங்கினர்.

பல கிராமங்களில் எடுத்துச் சென்ற நெல் மூட்டைகளுக்கு இதுவரை தனியார் வியாபாரிகள் பணம் தரவில்லை என்ற புகார் பரவலாக நிலவுகிறது.

இதுகுறித்து ஒரத்தநாடைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட விவசாயி தெரிவித்தது:

அரசு நேரடி நெல் நிலையங்களில் 41 கிலோ மூட்டைக்கு ரூ. 480 கிடைக்கும். ஆனால், தனியார் வியாபாரிகள் 62 கிலோ மூட்டைக்கு ரூ. 840-தான் விலை நிர்ணயம் செய்தனர்.

எங்களது பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாததால், தனியார் வியாபாரிகளிடம் விற்றோம். நெல் மூட்டைகளை விற்று பணம் தருவதாகக் கூறினர்.

ஆனால், ஏறத்தாழ 60 நாள்களாகியும் இன்னும் பணம் கிடைக்கவில்லை என்றார்.

ஒரத்தநாடு, பாபநாசம் உள்ளிட்ட பகுதிகளில் இந்தப் புகார் பரவலாகக் கூறப்படுகிறது.

தண்ணீர் பற்றாக்குறை, மின்வெட்டு என பல்வேறு சிரமங்களுக்கு இடையே குறுவை சாகுபடி மேற்கொண்டாலும், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் பரவலாகத் திறக்கப்படாததால், இந்தப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளோம் என்கின்றனர் பாதிக்கப்பட்ட விவசாயிகள்.

இன்றைய வேளாண் செய்திகள்

27.11.2012 P.M

28.11.2012 A.M

## வேளாண் துறை ஏற்றுமதி ரூ.1.31 லட்சம் கோடி



புதுடில்லி: சென்ற 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, இரண்டு மடங்கிற்கும் மேல் உயர்ந்து, 2,397 கோடி டாலராக (1.31 லட்சம் கோடி ரூபாய்) அதிகரித்துள்ளது.இது, 2010-11 மற்றும் 2009-10ம் நிதியாண்டுகளில் முறையே, 1,473 கோடி டாலர் (81,015 கோடி ரூபாய்) மற்றும் 1,056 கோடி டாலர் (58,080 கோடி ரூபாய்) என்ற அளவில் இருந்தது.அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி மீதான தடை நீக்கப்பட்டது. இந்திய நறுமணப் பொருட்கள், காபி, சர்க்கரை ஆகியவற்றிற்கு, அயல் நாடுகளில் தேவை அதிகரித்து வருகிறது.இதனால், நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, சென்ற நிதியாண்டில், சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதாக, வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் புரந்தேஸ்வரி, பார்லிமென்டில் தெரிவித்தார்.

மத்திய அரசு, சென்ற 2011ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி மீதான தடையை நீக்கியது. இதன் விளைவாக, சென்ற நிதியாண்டில், 172 கோடி டாலர் (9,460 கோடி ரூபாய்) மதிப்பிலான, 39 லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, கடந்த 2009-10ம் நிதியாண்டில், 7.60 கோடி டாலர் (418 கோடி ரூபாய்) என்ற அளவில் இருந்தது.பாசுமதி அரிசி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 31.70 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 320 கோடி டாலராகவும் (17,600 கோடி ரூபாய்) உயர்ந்திருந்தது. இதனால், சென்ற 2011-12ம்

நிதியாண்டில், நாட்டின் ஒட்டுமொத்த அரிசி ஏற்றுமதி, 70 லட்சம் டன்னாக அதிகரித்து காணப்பட்டது.மத்திய அரசு, உணவு தானியங்கள் உள்ளிட்ட, வேளாண் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில், பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.குறிப்பாக, தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு தானியங்கள் கையிருப்பு, உபரி, சாதாரண மனிதனும் வாங்கும் வகையில் சந்தை விலை உள்ளதா என்பது போன்ற பல அம்சங்களின் அடிப்படையிலேயே சலுகைகள் வழங்கப்படுகின்றன.

சென்ற நிதியாண்டில், 183 கோடி டாலர் மதிப்பிலான, 27.40 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, கடந்த 2010-11 மற்றும் 2009-10ம் நிதியாண்டுகளில் முறையே, 119 கோடி டாலர் மற்றும் 2.30 கோடி டாலர் என்ற அளவில் இருந்தன.கடந்த மூன்று ஆண்டுகளாக, காபி, தேயிலை, நறுமணப்பொருட்கள், நிலக்கடலை, கொத்தவரை, கோதுமை ஆகிய வேளாண் பொருட்களின் ஏற்றுமதி சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது.கடந்த 2009-10ம் நிதியாண்டில், 43 கோடி டாலராக இருந்த, நாட்டின் காபி ஏற்றுமதி, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 95.20 கோடி டாலராக அதிகரித்துள்ளது. மதிப்பீட்டு காலத்தில், மிளகாய், ஏலக்காய், மஞ்சள், மிளகு உள்ளிட்ட நறுமணப்பொருட்கள் ஏற்றுமதி, 130 கோடி டாலரிலிருந்து, 275 கோடி டாலராக உயர்ந்துள்ளது.இந்திய வேளாண் பொருட்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ள நிலையில், சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், முந்திரி, பழங்கள் போன்ற வேளாண் பொருட்களின் இறக்குமதியும் உயர்ந்துள்ளது.

இதில், சமையல் எண்ணெயின் பங்களிப்பே, மிகவும் அதிகமாக உள்ளது.சென்ற நிதியாண்டில், நாட்டின், வேளாண் பொருட்கள் இறக்குமதி, 1,429 கோடி டாலராக (78,595 கோடி ரூபாய்) அதிகரித்துள்ளது. இது, 2009-10ம் நிதியாண்டில், 1,070 கோடி டாலரர் என்ற அளவில் இருந்தது.கணக்கீட்டு காலத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி, 560 கோடி டாலரிலிருந்து, 966 கோடி டாலராக அதிகரித்துள்ளது.@மலும், முந்திரி இறக்குமதி, 64 கோடி டாலரிலிருந்து, 113 கோடி டாலராகவும், பருப்பு வகைகள் இறக்குமதி, 185 கோடி டாலரிலிருந்து, 207 கோடி டாலராகவும் உயர்ந்துள்ளன என, அமைச்சர் புரந்தேஸ்வரி மேலும் தெரிவித்தார்.

### நெல் பயிரை காப்பீடு செய்து பயன் பெற கடையம் வட்டார விவசாயிகளுக்கு அழைப்பு

திருநெல்வேலி : கடையம் வட்டார விவசாயிகள் நெல் பயிரை காப்பீடு செய்து பயன் பெற வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.கடையம் வட்டாரத்தில் தற்போது நடைபெற்று வரும் நெல் சாகுபடிக்கு மழை மிக குறைவாகவும், காலத்திற்கு பெய்யாமலும் உள்ள சூழ்நிலை உள்ளது. பிசான பருவத்தில் நெல் பயிர் செய்யும் விவசாயிகள்

தங்கள் பயிரை இயற்கை சீற்றங்களில் இருந்து பாதுகாக்க தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் வேளாண்மை பயிர்க்கடன் பெறும் மற்றும் பயிர் கடன் பெறா விவசாயிகள் காப்பீடு செய்து பயன்பெற கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் கேட்டுக் கொண்டுள்ளார். தேசிய வேளாண் காப்பீடு திட்டம்: ராஷ்ட்ரிய கிரிசி பீமாயோசனா என்ற தேசிய வேளாண்மை காப்பீடு திட்டத்தில் உணவு தானியங்கள் ôல், பயறு, பருத்தி, கரும்பு ஆகிய பயிரை வறட்சி தீவிரமான பூச்சி மற்றும் நோய் தாக்குதல், மழை வெள்ளம், இடி மின்னல் சூறாவளி ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் பயிர் சேதங்களை விவசாயி எதிர் கொள்ளும் பொருட்டு பயிர்கள் காப்பீடு செய்யப்படுகிறது.

நெல் பயிர் காப்பீடு: 2012 பிசான பருவத்தில் பயிர் செய்யும் நெல் விவசாயிகள், தங்கள் ஒரு ஏக்கர் நெல் பயிரை தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்ய ரூ. 80 செலுத்த வேண்டும். விவசாயிகள் பயிர் கடன் பெறும் வங்கிகள் மற்றும் வேளாண்மை தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களிலும் கடன்பெறா விசாயிகள் வேளாண்மை துறையின் மூலமாகவும் அல்லது நேரடியாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் செலுத்தி அதற்கான விண்ணப்பத்தில் விபரங்கள் பூர்த்தி செய்து கையொப்பம் இட வேண்டும். இவ்வாறு கட்ட வேண்டிய பிரிமீயத் தொகையை டிசம்பர் 15ம் தேதிக்குள் செலுத்தி தங்கள் நெல் பயிரை காப்பீடு செய்து தங்களுக்கு இயற்கையினால் ஏற்படும் இழப்பீடுகளை தவிர்த்து சிறப்பாக விவசாயம் செய்து வாழ்வில் வளம் பெற கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பார்த்தீனியம் விஷசெடி ஒழிப்பு முறைகள் ராவுத்தப்பேரியில் வேளாண் அதிகாரி விளக்கம்

திருநெல்வேலி : ராவுத்தப்பேரியில் நடந்த முகாமில் பார்த்தீனியம் விஷசெடி ஒழிப்பு முறைகள் பற்றி வேளாண்மை இணை இயக்குநர் சவுந்திராஜ் விளக்கினார்.கடையம் வட்டாரம் ராவுத்தப்பேரியில் பார்த்தீனியம் விஷசெடி ஒழிப்பு முகாம் நடந்தது. நிகழ்ச்சிக்கு வேளாண்மை இணை இயக்குநர் சவுந்திராஜ் தலைமை வகித்து பார்த்தீனியம் விஷசெடி ஒழிப்பு பற்றி கூறியதாவது: ஹிஸ்டிரோ போராஸ் என்ற விஷத்தன்மை வாய்ந்த களை எல்லாவித தட்பவெப்ப சூழ்நிலையிலும் வளரக்கூடியது. இது நீண்ட காலத்துக்கு சுமார் 30 ண்டுகள் வரை முளைப்புத்திறன் கொண்ட விதைகளை அதிகளவில் உற்பத்தி செய்கிறது. இவை காற்றின் மூலம் மிக வேகமாக பரவக்கூடியவை. ஒரு ஆண்டு விதைப்பு ஏழு ஆண்டுகளுக்கு களையெடுப்பு என்ற கருத்து பார்த்தீனியத்தை பொறுத்தவரை உண்மையாக உள்ளது. ஒரு செடியில் சுமார் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை விதைகள் உருவாகின்றன. இவை முதிர்ச்சி பெறாத நிலையில் கூட வளரக்கூடிய தன்மை உடையவை. வறண்ட கோடை மாதங்களில் பார்த்தீனியம் ஒரு ரொசேட் வடிவத்தில் தோன்றுகிறது. ஆனால் மழை காலத்தில் சுமார் 90 சென்டி மீட்டர் வரை வளர்வதேடு

பசுமையான இலைகளுடன் அதிகளவில் பூக்கின்றன. இச்செடியானது ஆண்டு முழுவதும் பூக்கும் தன்மை கொண்டது. இக்களைகள் கால்நடைகளில் சரும ஒவ்வாமையின்மையையும், செம்மறி ஆடுகளில் விஷத்தன்மையினையும் ஏற்படுத்துகின்றது. மேற்கண்ட பாதிப்புகளுக்கான முழுக்காரம் பார்த்தீனின் என்னும் நச்சு ஆகும். இக்களையினை கட்டுப்படுத்தும் முறைகள் வருமாறு:

கைவினை முறை: களை மண்ணில் இருந்து வெளிப்படும் போது இம்முறையினை பயன்படுத்தலாம். அதிக பரப்பில் காணப்படும் போது கை களை எடுக்கும் முகாம்கள் நடத்தலாம். பயிர் சுழற்சி பயிர் சாகுபடி உள்ள நிலத்தில் மழைக்காலத்தில் பயிருடன் சாமந்தியினை சுழற்சி முறையில் சாகுபடி செய்து கட்டுப்படுத்தலாம். அல்லிலோபதிக் விளைவு: இக்களையினை கேசியா செரிசியா என்னும் தாவரம் மூலம் கட்டுப்படுத்தலாம்.

மக்க வைத்தல்: பார்த்தீனியம் விஷ செடி களையில் பூக்கும்போதே மக்கவைத்து உரமாக்கும் முறையினை பயன்படுத்தி அதிக வெப்பத்தின் மூலம் விதை முளைப்புத்தன்மையை அழிக்கலாம்.

ரசாயன முறை: தரிசு நிலங்களில் திறந்தவெளி, சாலையோரம் மற்றும் ரயில் இருப்புப்பதை ஓரங்களில் அதிகளவில் இதுபோன்ற நிலங்களில் 15 முதல் 20 சதவீத சமையல் உப்பு கரைசல் தெளிப்பதன் மூலம் இக்களையினை கட்டுப்படுத்தலாம். ஒட்டும் திரவத்துடன் 2,4-டி-2.5 கிலோ கிராம் எக்டர் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். பயிர் சாகுபடி உள்ள நிலங்களில் களைக்கொல்லிகள் பெரியளவில் பயன்படுத்தலாம். சோளம், மக்காச்சோளம், கரும்பு பயிர்களில் சிமாசின் அட்ரசின் களைக்கொல்லியினையும் பயிறு வகை மற்றும் பருத்தி பயிர்களில் அலக்குளோர் மற்றும் பூட்டோகுளோர் களைக்கொல்லியினை முறையே பயன்படுத்தி பார்த்தீனியம் விஷ செடிகளை அழிக்க வேண்டும். இவ்வாறு வேளாண் இணை இயக்குநர் சவுந்திராஜ் கூறினார் முகாமில் கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர், துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## திராட்சை இடைத்தரகர்கள் மீதுநடவடிக்கை : கலெக்டர் உத்தரவு

தேனி:திராட்சை விவசாயிகளுக்கு இடையூறு செய்யும், இடைத்தரகர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்க, கலெக்டர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். கம்பம் பகுதியில் திராட்சை சாகுபடி செய்யும் விவசாயிகளை இடைத்தரகர்கள் சிலர் நேரடியாக விற்பனை செய்யவிடாமல் தடுத்து வந்தனர். விளையும் திராட்சையை தங்கள் மூலமே விற்பனை செய்ய வேண்டும், என நிர்பந்தம் செய்து வந்தனர்.தோட்டக்கலைத்துறை இந்த விஷயத்தில் தலையிட்டு, விவசாயிகள் திராட்சையை நேரடியாக விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது.

இதனால் சில மாதங்கள் விவசாயிகள் நேரடியாக திராட்சையை விற்பனை செய்து நல்ல வருவாய் பார்த்தனர். இந்நிலையில் இடைத்தரகர்கள் மீண்டும் ஆதிக்கம் செலுத்தி விவசாயிகளுக்கு

பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி, அவர்களது திராட்சையை விற்க விடாமல் தடுத்து விட்டனர். விவசாயிகளுக்கு நல்ல விலையும் கொடுப்பதில்லை. திராட்சை விவசாயிகள் சங்கத்தினர் ,கலெக்டர் பழனிசாமியிடம் முறையீடு செய்தனர். கலெக்டர் இந்த விஷயத்தில் தலையிட்டு, விவசாயிகளுக்கு இடையூறு செய்யும் இடைத்தரகர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## செம்மை கரும்பு சாகுபடி வயல்கள்

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள செம்மை கரும்பு பயிர்களை வேளாண் துணை இயக்குனர் ஆய்வு செய்தார்.தியாகதுருகம் ஒன்றியத்தில் உள்ள வடதொரசலூர், பிரிதிவிமங்கலம், பீளமேடு, பல்லக்சேரி, கலையநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள செம்மை கரும்பு சாகுபடி வயல்களை விழுப்புரம் வேளாண் துணை இயக்குனர் அன்பழகன் நேற்று ஆய்வு செய்தார்.

இம்முறையில் சாகுபடி செய்வதற்கு கரும்பு நாற்றுக்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் பசுமை குடிகளை பார்வையிட்டு செம்மை கரும்பு நடவு முறை, கரும்பு பயிர் பராமரிப்பு உள்ளிட்டவைகளை விவசாயிகளுக்கு விளக்கினார்.அப்போது வேளாண் துணை இயக்குனர் அன்பழகன் கூறியதாவது: செம்மை கரும்பு சாகுபடி மூலம் 20 டன் வரை கூடுதல் மகசூலை பெறமுடியும். சொட்டு நீர் பாசனம் அமைக்க 1 ஏக்கருக்கு 46 ஆயிரத்து 816 ரூபாய் தொகையை அரசு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முழு மானியமாக வழங்குகிறது.பெரு விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம் வழங்கப்படும். பசுமை குடில் அமைத்து அதில் உற்பத்தி செய்யப்படும் கரும்பு நாற்றுகளை செம்மை கரும்பு சாகுபடி மூலம் பயிரிட்டு மகசூலை பெருக்க தியாகதுருகம் விவசாயிகள் பலர் ஆர்வமுடன் முன்வந்துள்ளது பாராட்டுக்குறியது.
இவ்வாறு வேளாண் துணை இயக்குனர் அன்பழகன் கூறினார். உதவி வேளாண் இயக்குனர் ராமச்சந்திரன், வேளாண் அலுவலர் கிருஷ்ணகுமாரி, உதவி வேளாண் அலுவலர் ரமேஷ் உடனிருந்தனர்.

## பாலத்தில் மக்காச்சோளம்உலர வைப்பதால் பாதிப்பு

சின்னசேலம் அருகே மேல்நாரியப்பனூர் சாலை பாலத்தில் மக்காச்சோளம் உலர வைப்பதால் வாகன ஓட்டிகள் பாதிப்படைந்து வருகின்றனர்.சின்னசேலம் மேல்நாரியப்பனூர்-செல்லியம்பாளையம் செல்லும் சாலையில் உள்ள பாலத்தின் மீது விவசாயிகள் மக்காச்சோளம் உலர வைத்து வருகின்றனர். இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் அதிகளவில் இந்த சாலையில் செல்கிறது.மக்காச்சோளம் உலர வைத்துள்ளதால் இந்த பாலத்தில் செல்லும் வாகனங்கள் அடிக்கடி விபத்துள்ளாகி வருகிறது. குறிப்பாக இரவு நேரங்களில் அதிகம் நடக்கிறது. எனவே முக்கிய சாலையாக உள்ள அங்கு தானியங்கள் உலர வைப்பதை தடுக்க வேண்டும்.

## விவசாய நிலத்தில் வளரும் சந்தன மரங்கள் அறியாமையால் வெட்டி வீழ்த்தும் அவலம்

நங்கவள்ளி: நங்கவள்ளி ஒன்றியத்தில், தனியார் தோட்டங்களில் பரவலாக சந்தன மரங்கள் வளர்ந்து வருகிறது. அறியாமையால், விவசாயிகள் அவற்றை வெட்டி வருகின்றனர்.

சேலம் மாவட்ட வனப்பகுதிகளில், சந்தனமரங்கள் அதிகமாக காணப்பட்டது. வனப்பகுதியில் இருந்த ஏராளமான சந்தனமரங்கள் வெட்டி கடத்தப்பட்டது. 2004ல் சந்தனமர கடத்தல் வீரப்பனை அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்ற பின், வனக்குற்றங்கள் குறைந்த போதிலும், சேலம் மாவட்ட வனப்பகுதிகளில் மீண்டும் சந்தன மரங்கள் எதிர்பார்த்த அளவு வளரவில்லை. அதனால், வனத்துறையினர், சந்தனமரக் கன்றுகளை நர்ஸரியில் வளர்த்து, வனத்தில் நட முடிவு செய்தனர். விதைகளில் சந்தனமரக் கன்றுகள் வளராததால், வனத்துறையினர் ஏமாற்றமடைந்தனர். நிலப்பகுதியில் விழும், பறவைகளின் எச்சத்தில் காணப்படும் சந்தன விதைகள் மட்டுமே மரமாக வளர்வது தெரிய வந்தது. இதர மரங்கள் போல, விதை போட்டு சந்தனமரங்களை வளர்க்க முடியாது என்பதால், சந்தனமரக் கன்றுகளை வளர்த்து வனத்தில் நடவு செய்யும் திட்டத்தை வனத்துறை கை விட்டது. சந்தனமரம், 20 ஆண்டுகள் வளர்ந்தால் மட்டுமே சந்தன கட்டையாக பயன்படுத்த முடியும். வனப்பகுதியில் வளரும் சந்தனமரங்கள் சமீபகாலமாக, சேலம் மாவட்டம், நங்கவள்ளி சுற்றுப்பகுதி கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள், சாலையோரங்கள், பொது இடங்களில் பரவலாக வளர்ந்துள்ளது. சின்ன சோரகை, பெரிய சோரகை, சூரப்பள்ளி, நங்கவள்ளி அடுத்த பணிக்கனூர் பகுதிகளில், ஏராளமான சந்தன மரங்கள் காணப்படுகிறது. அவை சந்தன மரம் என்பது கூட அப்பகுதி மக்களுக்கு தெரிவதில்லை. அறியாமையால், தங்கள் நிலத்தில் வளரும் சந்தன மரங்களை விறகுக்காக பொதுமக்கள் வெட்டி விடுகின்றனர்.

வளர்வது சந்தனமரம் எனத் தெரிந்தவர்கள் கூட, அதை வளர்த்தால், திருட்டு கும்பலால் உயிருக்கும் பாதுகாப்பு இருக்காது, எனக் கருதி சந்தன மரத்தை வெட்டி விடுகின்றனர். அழிவின் விழிம்பில் உள்ள விலைமதிப்பு மிக்க சந்தன மரங்கள், நாளுக்கு நாள் குறைந்து வரும் நிலையில், கிராமங்களில் சந்தன மரங்கள் இயற்கையாகவே வளர்ந்தாலும், மக்கள் வெட்டி வீழ்த்தும் நிலை உள்ளது. எனவே, வனத்துறையினர் இப்பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, இயற்கையாக வளரும் சந்தன மரங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தர்மபுரி உழவர் சந்தையில் காய்கறிகள் விலை திடீர் உயர்வு

தர்மபுரி: தர்மபுரி உழவர் சந்தையில் கார்த்திகை தீபத்தையொட்டி, காய்கறிகள் விலை திடீரென உயர்ந்தது. தர்மபுரி மாவட்டத்தில் கார்த்திகை மாதம் முதல் தேதி முதல் பலர் ஐயப்ப ஸ்வாமி கோவிலுக்கு மாலை அணிந்து வருகின்றனர். மேலும் கார்த்திகை மாதத்தில் தொடர்ந்து பல திருமண மூகூர்த்தங்கள் உள்ளிட்ட பல்வேறு சுபாநிகழ்ச்சிகள் நடந்து வருகிறது. இதனால்,

பொதுமக்கள் சைவ உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். இதன் காரணமாக சந்தையில் காய்கறிகளுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. அதேநேரம் சந்தை தேவையை விட காய்கறிகள் வரத்து குறைந்து. இதனால், காய்கறிகள் விலை திடீரென உயர்ந்தது.
நேற்று கார்த்திகை தீபத்தை ஒட்டி அதிகளவில் பொதுமக்கள் சந்தைகளில் அதிகளவில் காய்கறிகளை வாங்க குவிந்தனர். தர்மபுரி உழவர் சந்தையில் வழக்கத்தை விட இரு மடங்கு வாடிக்கையாளர்கள் கூட்டம் இருந்தது. சந்தைகளில் நேற்று காய்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்தது. குறிப்பாக ஆங்கில வகை காய்கறிகள் விலை கடந்த நாட்களை விட அதிகரித்து இருந்தது. டபுள் பீன்ஸ், ஒரு கிலோ, 90 ரூபாய், பச்சை பட்டாணி, கிலோ, 65க்கும், நூக்கல் ஒரு கிலோ, 40, கருணை கிழங்கு, சேப்ப கிழங்கு கிலோ, 35, காலிஃபிளவர், ஒன்று, 27, வெள்ளரி, சவ்சவ், குடை மிளகாய் ஆகியவை கிலோ, 20, சின்ன வெங்காயம் கிலோ, 36, பீன்ஸ் கிலோ, 25 பீட்ருட் கிலோ, கேரட், உருளை கிழங்கு ஆகியவை கிலோ, 22, பீட்ருட், பிர்கங்காய் கிலோ, 15 , சர்க்கரை பூசணி, தக்காளி கிலோ, 12 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.
வெளி மார்க்கெட்டில் இக்காய்கறிகள் விலை உழவர் சந்தையை விட சற்று கூடுதலாக இருந்தது. நூக்கல் விலை இது வரை கிலோ, 40 ரூபாய்க்கு விற்பனை ஆவது தங்களுக்கு தெரிந்து இதுதான் முதல் முறை என காய்கறி வாங்கி சென்ற ஏராளமான பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

27th nov 2012 P.M

**வாழை இலைகள் கிடைக்கவில்லை**

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் வாழை இலைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வைகை ஆற்றின் கரையோர கிராமங்களான அணைக்கரைப்பட்டி, புள்ளிமான்கோம்பை, தர்மத்துப்பட்டி, மூணாண்டிபட்டி, வெள்ளையத்தேவன்பட்டி பெரியகுளம், குள்ளப்புரம், வடுகபட்டி, மேல்மங்கலம் பகுதிகளில் வாழை சாகுபடி அதிகம் உள்ளது. தற்போது முகூர்த்த காலம் என்பதால், வாழை இலைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஐயப்ப, முருக பக்தர்களின் விரத காலத்தில், வாழை இலைகளுக்கு கட்டாய தேவை உள்ளது. போதுமான மழை இல்லாததால் இந்த ஆண்டில் வாழை சாகுபடி குறைந்துள்ளது. ஆண்டிபட்டி காய்கறி மார்க்கெட்டில் வாழை இலை வரத்தும் குறைந்துள்ளது. தேவை அதிகரித்து வரத்து குறைந்ததால் விலை உயர்ந்து வருகிறது. கட்டு ஒன்று ஆயிரம் ரூபாயை கடந்து விட்டது. சில்லரை விலையில், ஐந்து இலைகள் கொண்ட மடி 25 முதல் 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது. விலை உயர்வால் ஓட்டல்களில் சாப்பிடுவதற்கும், பார்சல்கள் கட்டுவதற்கும்,பிளாஸ்டிக் காகிதங்களை பயன்படுத்துகின்றனர்.

## விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கல்

சிவகங்கை:""கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பாண்டிற்கு ரூ.55 கோடி இலக்கு நிர்ணயித்து, அக்.,வரை ரூ.30.29 கோடி பயிர்கடன் வழங்கியுள்ளதாக," கூட்டுறவு இணைபதிவாளர் காந்திநாதன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது ; மாவட்டத்தில், நடப்பாண்டிற்கு ரூ.55 கோடி வரை பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். அக்., இறுதி வரை 8,358 விவசாயிகளுக்கு, 30 கோடியே 29 லட்ச ரூபாய் கடன் வழங்கியுள்ளோம். தானிய ஈட்டுக்கடனாக, 99 பயனாளிகளுக்கு ரூ.1.44 கோடி தரப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த முதலீட்டுக்கடனாக 760 பயனாளிகளுக்கு, 2.80 கோடி ஒதுக்கியுள்ளோம். மாவட்டத்தில், 1,725 பயனாளிகளுக்கு, ரூ.1.63 கோடி சிறுவணிக கடன் தரப்பட்டுள்ளது. சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி கடனாக, 4.62 கோடி வழங்க இலக்கு நிர்ணயித்து, அக்.,இறுதி வரை 4,509 பயனாளிகளுக்கு, 3.19 கோடி கடன் தரப்பட்டுள்ளது.மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தில், 340 பேருக்கு, 75 லட்ச ரூபாயும்; மாற்றுத்திறனாளிகள் 108 பேருக்கு, 31 லட்ச ரூபாயும் கடன் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில், முதற்கட்டமாக 42 தொடக்க விவசாய கடன் சங்கங்கள் கம்ப்யூட்டர் மயமாக்கப்படும், என்றார்.

## தண்ணீரின்றி வெங்காய விவசாயிகள் கண்ணீர்

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தண்ணீரின்றி வெங்காய பயிர்கள் கருகுவதால், விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த மாதம் பெய்த மழையை நம்பி, பிள்ளையார்நத்தம், பூவாணி, குன்னூர் பகுதியில், 300 ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பில், விவசாயிகள் வெங்காயம் நடவு செய்து உள்ளனர். ஆனால் தொடர்ந்து மழை பெய்யவில்லை. கிணற்று நீரை பாய்ச்ச போதிய மின்சாரமும் கிடைக்கவில்லை. இதனால் நடவுசெய்த வெங்காய பயிர்கள், 30 நாட்களிலே தண்ணீரின்றி காய்ந்து வருகிறது.

இந்நிலையில், கடந்த வாரம் பெய்த மழையை நம்பி, விவசாயிகள் சிலர் வெங்காயம் நடவு செய்தனர்.இவர்களும் தண்ணீரின்றி பரிதவிக்கின்றனர். கடந்தாண்டு அதிக விளைச்சலால் விலையில்லாமல், அறுவடை செய்ய கூட பணமில்லாமல் பாதித்த விவசாயிகள், இந்தாண்டு அதிக பணம் செலவிட்டு நடவு செய்தும், தண்ணீரின்றி நஷ்டபட்டுள்ளனர். விவசாயி சுராங்கனி,"" மழையை நம்பி, உழவு, விதை, உரம் என, ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தேன். மழை பெய்யாததால் பயிர்கள் கருகுகின்றன. நஷ்ட ஈடு வழங்க வேண்டும்," என்றார்.

## குன்னூரில் தேயிலை ஏலம்

குன்னூர்:குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 47வது ஏலம் நடந்தது.

இதில், மொத்தம் 14.80 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.இலை ரகம் 10.17

லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.63 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டதால் ஏலத்தில் விற்பனை களை கட்டியது. விற்பனைக்கு வந்த மொத்தம் 14.80 லட்சம் கிலோவில் 95 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும், கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் விலை அதிகரித்தது. விலையிலும் கடந்த சில வாரங்களுக்கு பிறகு உயர்வு காணப்பட்டது.

சாதாரண இலை ரகத்துக்கு 81-85 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 100-135 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 84-87 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 100-145 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக சிடிசி டஸ்ட் ரக ஒரு கிலோ தேயிலை தூளுக்கு 153 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு 270 ரூபாயும் விலை கிடைத்தது.

வரும் 29 மற்றும் 30ம் தேதி நடக்கும் 48வது ஏலத்தில் 10.94 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## நாட்டு கோழி வளர்ப்பு இலவச பயிற்சி முகாம்

காஞ்சிபுரம்:ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில் "வீரியரக நாட்டு கோழி' வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி நாளை நடைபெற உள்ளது.

இது குறித்து, ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையம் வெளியிட்டுள்ள அறிக்கை:நாளை வியாழக்கிழமை "வீரியரக நாட்டுக் கோழி' வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி நடைபெற உள்ளது. அறிவியல் முறையிலான பராமரிப்பு, சரிவிகித உணவு, ஆரோக்கியம், முதலீடு ஆகியவை கோழிப்பண்ணை வளர்ப்புக்கு முக்கியம். தற்போது, கோழியின் இறைச்சிக்கும், முட்டைக்கும் விருப்பமும் தேவையும் அதிகரித்துள்ளது. எனவே, கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு சுயவேலை வாய்ப்பை பெறலாம். புரதசத்து நிறைந்தஊட்டச்சத்து பொருட்கள் உற்பத்திக்கு உதவலாம். பண்ணையாளர்கள் புதிய தொழில்நுட்பங்களில் பயிற்சி பெற்று பயனடையலாம்.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பெரியநொளம்பையில் விதை உற்பத்தி பயிற்சி

செஞ்சி:பெரியநொளம்பை கிராமத்தில் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது.பெரியநொளம்பை கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது.ஊராட்சி தலைவர் சிவப்பிரகாசம் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர் கோதண்டன் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேலு, விவசாய திட்டங்கள் குறித்து விளக்கினார். விதை சான்று அலுவலர் நாராயணசாமி, தரமான விதை உற்பத்தி தொழில் நுட்பங்களை விளக்கினார்.வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஸ்ரீதேவி பயிற்சியாளர்களுக்கு, திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார்.விதைப் பண்ணை அமைத்து, விதை உற்பத்தி செய்வது, விதை நேர்த்தி செய்வது, மண் சோதனை செய்வதன் நோக்கம், அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது.

உதவி விதைப்பண்ணை அலுவலர் கண்ணப்பன், உதவி வேளாண்மை அலுவலர்கள் வெங்கடேசன், இளவரசி, பராசக்தி, கிருஷ்ணமூர்த்தி, ரகுபதி, தமிழ்மணி, அருள்பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.துணை வேளாண்மை அலுவலர் சாந்தலட்சுமி நன்றி கூறினார்.

## பார்த்தீனியசெடி அழிக்கும் முகாம்

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி ஒன்றியத்தில் மக்களை நோக்கி திட்டத்தில், விவசாய நிலங்களில் விளைந்துள்ள பார்த்தீனிய செடிகள் அழித்தல் முகாம் நடந்தது.உலகலாம்பூண்டி, தும்பூர், குண்டலபுலியூர் ஊராட்சிகளில் மக்களை நோக்கி திட்டத்தில் நடந்த விழிப்புணர்வு பேரணி மற்றும் செடிகளை அழிக்கும் முகாமிற்கு பி.டி.ஓ., சேகர் தலைமை தாங்கினார்.பி.டி.ஓ., ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். கூடுதல் பி.டி.ஓ., கி÷ஷார்அகமது வரவேற்றார். பார்த்தீனிய செடிகள் அழிக்கும் விழிப்புணர்வு பேரணி, கிராமங்களில் முக்கிய வீதிகள் வழியாக சென்று மக்களிடத்தில் துண்டு பிரசுரங்களை வழங்கினர்.பின்னர் மக்களை நோக்கி திட்ட தன்னார்வலர் கள், கிராமங்களில் உள்ள வயல்களுக்கு சென்று அங்கு விளைந்துள்ள விஷ செடிகளை அகற்றும் முறை குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆசீர்தேவகுமார், தன்னார்வலர்கள் வடிவுமூர்த்தி, பரமேஸ்வரி, ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜேந்திரன், அண்ணாமலை, ராஜாமணி, கவுன்சிலர்கள் சிங்காரவேலு, பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## நெருக்கடியில் தவிக்கும் வேளாண் துறை



புதுடில்லி: வேளாண் துறை உற்பத்தி சிறப்பான அளவில் உள்ளது. இருப்பினும், மக்கள் தொகை பெருக்கம், இயற்கை வள ஆதாரங்கள் குன்றி வருவது உள்ளிட்ட பல நெருக்கடிகளில், இந்திய வேளாண் துறை சிக்கி தவித்து வருகிறது என, மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் தாரிக் அன்வர் தெரிவித்தார்.
கடந்த 1951-52ம் நிதியாண்டில், நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 5.2 கோடி டன் என்ற அளவில் இருந்தது. இது,மிக வேகமாக வளர்ச்சி கண்டு, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 25.74 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.

கடந்த, 20 ஆண்டுகளில், வேளாண் துறையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும், மக்கள் தொகை அதிகரிப்பு, விலைவாசி உயர்வு, விளை நிலங்கள் சுருங்கி வருவது போன்றவற்றால், இந்திய வேளாண் துறை நெருக்கடி நிலைக்கு

ஆளாகியுள்ளது.இதற்கு எடுத்துக்காட்டாக, கடந்த 1951ம் ஆண்டில், 0.91 ஹெக்டேராக இருந்த, தனிநபர் நிலப் பயன்பாடு, சென்ற, 2001ம் ஆண்டு, 0.32 ஹெக்டேராக சரிவைக் கண்டுள்ளது. இது, வரும் 2050ம் ஆண்டில், 0.09 ஹெக்டேராக மிகவும் வீழ்ச்சி காணும்.வேளாண் துறையை பாதிக்கும் மற்றொரு முக்கிய காரணியாக பருவ நிலை மாற்றம் உள்ளது. இது, பயிர்கள், பால் மற்றும் மீன் உற்பத்தியில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.இது போன்ற பல்வேறு இடர்பாடு களை எதிர்கொள்ள, எதிர்கால உணவு தேவைகள், வாழ்வாதார பாதுகாப்பை உறுதிபடுத்த, திட்டமிட்ட, முறையான ஆய்வுகள் மிகவும் அத்யாவசியமான ஒன்றாகும் என, தாரிக் அன்வர் மேலும் கூறினார்.

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ; ரூ.20 லட்சத்திற்கு வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 600 மூட்டை மஞ்சள், 20 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், மஞ்சள் ஏலம் நடந்தது.ஏலத்துக்கு, கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, நைநினார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய வெளி மாவட்ட பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாது, ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி ஆகிய பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தாங்கள் விளைவித்த மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஏலத்தில், ஒரு குவிண்டால் விரலி மஞ்சள், குறைந்தபட்சம், 4,113 ரூபாய்க்கும், அதிகபட்சம், 6,499 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குறைந்தபட்சம், 3,012 ரூபாய்க்கும், அதிகபட்சம், 5,269 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குறைந்தபட்சம், 9,006 ரூபாய்க்கும், அதிகபட்சம், 12 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

## சர்க்கரை மீதான கட்டுப்பாட்டை நீக்க பரிசீலனை



புதுடில்லி: சர்க்கரை மீதான கட்டுப்பாட்டை நீக்குவது குறித்து பரிசீலனை செய்யப்படுவதாக, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ், ராஜ்யசபாவில் தெரிவித்தார்.பிரதமரின் பொருளாதார

ஆலோசனை குழுவின் தலைவர் சி.ரங்கராஜன் தலைமையில், அமைக்கப்பட்ட கமிட்டியின் பரிந்துரையின் அடிப்படையில், சர்க்கரை மீதான கட்டுப்பாட்டை நீக்க திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், இது, மாநில அரசுகளின் கருத்துக்கேற்ப அமலுக்கு வரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.தற்போதைய நிலையில், உள்நாட்டில், சர்க்கரை உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. சர்க்கரை ஆலைகள், அவற்றின் உற்பத்தியில், பெரும்பகுதியை, மத்திய அரசு நிர்ணயிக்கும் விலையில், வழங்க வேண்டியுள்ளது. அரசு, கொள்முதல் செய்யும் சர்க்கரை, ரேஷன் கடைகள் வாயிலாக குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

மீதமுள்ள சர்க்கரையை ஆலைகள், பொதுச் சந்தையில் விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. சர்க்கரை மீதான கட்டுப்பாடு நீக்கப்படும் நிலையில், மாநில அரசுகள், சர்க்கரை ஆலைகளிடமிருந்து, குறிப்பிட்ட தொகையில் சர்க்கரையை கொள்முதல் செய்து, குறைந்த விலையில், ரேஷன் கடைகள் வாயிலாக, விற்பனை செய்யும் வகையில், இக்குழு பரிந்துரை செய்துள்ளது.சர்க்கரை மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டால், அது, சர்க்கரை ஆலைகளுக்கும், விவசாயிகளுக்கும் பயன்அளிப்பதாக இருக்கும். மேலும், சர்க்கரை துறையில் முதலீடு அதிகரிப்பதற்கும், இது, வழிவகுக்கும் என, கூறப்படுகிறது.இதற்கு முன்பாக, டுடிஜா மற்றும் தோரட் ஆகிய இரு குழுக்கள், சர்க்கரை மீதான கட்டுப்பாடு குறித்து, அறிக்கை சமர்ப்பித்தன. ஆனால், இவ்விரு குழுக்களின் பரிந்துரை அமல்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வளர்ச்சி பாதையில் இந்திய காபி ஏற்றுமதி



குன்னூர்: காபி ஏற்றுமதியில் இந்தியா வளர்ச்சி அடைந்து வருகிறது. கடந்த நிதியாண்டில், 4,538 கோடி ரூபாய் மதிப்பிலான காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என, மத்திய காபி வாரியம்

தெரிவித்துள்ளது.
இவ்வாரியத்தின் செயலர் சந்திரசேகர், நீலகிரி மாவட்டம், குன்னூரில் ஆய்வு மேற்கொண்ட பின்னர், தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்க (உபாசி) கூட்டத்தில் பேசினார். அதன் விவரம் வருமாறு:

காபி உற்பத்தியில் இந்தியா வளர்ந்து வருகிறது. 2011-12ம் நிதி ஆண்டில், சர்வதேச அளவில் 13.27 கோடி மூட்டை காபி (ஒரு மூட்டை- 50 கிலோ) உற்பத்தி செய்யப்பட்டது.இதில் பிரேசிலின் பங்களிப்பு 35 சதவீதமாகும். இதையடுத்து, வியட்நாம் (15 சதவீதம்), கொலம்பியா மற்றும் இந்தோனேசியா (தலா 7 சதவீதம்), எத்தியோபியா (6 சதவீதம்), இந்தியா (4 சதவீதம்) ஆகிய நாடுகள் உள்ளன.

இந்தியாவில், 2011-12ம் நிதியாண்டில் அரபிகா வகை, 1.01 லட்சம் டன், ரோபஸ்டா வகை, 2.12 லட்சம் டன் என, மொத்தம், 3.13 லட்சம் டன் காபி உற்பத்தி செய்யப்பட்டது.நடப்பாண்டில், அரபிகா வகை காபி உற்பத்தி, 1.04 லட்சம் டன்னாகவும், ரோபஸ்டா வகை, 2 .21 லட்சம் டன்னாகவும் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இதையடுத்து, ஒட்டுமொத்த அளவில் இதன் உற்பத்தி, 3.25 லட்சம் டன்னாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.காபி உற்பத்தியில், கர்நாடக மாநிலம் முன்னோடியாக உள்ளது. அங்கு, மொத்தம், 2.21 லட்சம் டன் காபி உற்பத்தி செய்யப்படுகிறது. இதையடுத்து, கேரளா (68,100 டன்), தமிழகம் (18,350 டன்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.கடந்த 2011-12ல், 4,538 கோடி ரூபாய் மதிப்பிற்கு காபி ஏற்றுமதி செய்யப்பட்டது. நடப்பாண்டில், சென்ற செப்டம்பர் மாதம் வரையிலுமாக, 2,466 கோடி ரூபாய் மதிப்பிலான, 1.62 லட்சம் டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.கடந்த 2000ம் ஆண்டில், உள்நாட்டில் காபி பயன்பாடு, 55-60 ஆயிரம் டன்னாக இருந்தது. நாட்டின், காபி பயன்பாடு, ஆண்டுக்கு, 6 சதவீதம் வளர்ச்சிகண்டு, தற்போது, 1.15 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

28.11.2012 A.M

## மேட்டூரில் நீர்திறப்பு குறைப்பு



மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.நேற்று முன்தினம் வினாடிக்கு 694 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை வினாடிக்கு 2139 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நேற்று முன்தினம் மாலை விக்ஷனாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்திறப்பு நேற்று மாலை வினாடிக்கு 2046 கனஅடியாக குறைக்கப்பட்டது. நேற்று மாலை அணையின் நீர் மட்டம் 47.61 அடியாக இருந்தது. அணை நீர் இருப்பு 16.34 டிஎம்சி.

## ஆடு வளர்க்கும் திட்டம் விவசாயிகளுக்கு எச்சரிக் கை



திருபூர்: சமீப காலமாக பட்டி அமைத்து ஆடு வளர்ந்த்து அதிகம் லாபம் பெறலாம் என கவர்ச்சிகரமான திட்டங்களை தனியார் நிறுவனங்கள் அறிவித்து, விவசாயிகளிடம் இருந்து பெரும் தொகையை ஒப்பந்த அடிப்படையில் முதலீடாக பெற்று, மாதம் தோறும் ஊக்கத்தொகை உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்குவதாக அறிவித்து வருகின்றன. விவசாயிகள் பலர் பட்டிகளில் ஆடு வளர்க்கும் திட்டத்தில் முதலீடு செய்து வருகின்றனர். சில இடங்களில் விவசாயிகளிடம் பெற்ற தொகைக்கு அப்பகுதியில் செட் மற்றும் குறைந்த ஆட்டு குட்டிகளை வழங்கியுள்ளனர். பல இடங்களில் ஒப்பந்தம் செய்தவர்களுக்கு மாதம் ஊக்க தொகை வழங்கவில்லை என தெரிகிறது. ஈமு பண்ணைகளை போல இதிலும் மோசடி நடக்கும் என கூறப்படுகிறது.  இந்த திட்டம் குறித்து கால்நடைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘‘தமிழகத்தின் பெரும்பலான பகுதிகளில், 800 மி.மீ. குறைவாகவே ஆண்டு சராசரி மழையளவு உள்ளது.இங்கு கடலை பொட்டு, தேங்காய் நார் கழிவு, ஆகியவற்றை கொட்டகையின் கீழ் இட்டு ஆடுவளர்க்கலாம். ஆடு வளர்க்கும் திட்டத்தில் சேர்ந்து ஏமாறுவதை தவிர்த்து, தாங்களே சுயமாக ஆடுகள் வளர்க்கலாம்,‘‘ என்றனர்.

## தென் மாவட்டங்களில் இன்றும் மழை பெய்யும்



சென்னை : இலங்கை அருகே உருவாகியுள்ள காற்று சுழற்சி காரணமாக தென் மாவட்டங்களில் இன்றும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் மத்திய மேற்கு வங்கக்கடலில் மையம் கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்ததை அடுத்து கடந்த இரண்டு நாட்களாக வட தமிழகத்தில் மழை பெய்வது குறைந்தது. ஆனால் தென் தமிழகத்தில் மழை பெய்தது. இந்நிலையில், அந்த காற்றழுத்த தாழ்வு நிலை அங்கிருந்து மறைந்தது. இதற்கிடையே நேற்று இலங்கை அருகே மன்னார் வளைகுடாவை ஒட்டிய பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் ஒரு காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தென் தமிழகத்தில் இன்றும் மழை பெய்யும்.

**தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை கிலோ ரூ.900**



ஆரல்வாய்மொழி : குமரி மாவட்டம் தோவாளை பூ மார்க்கெட் பிரசித்தி பெற்றது. இங்கு சங்கரன்கோவில், ராஜபாளையம், மதுரை, கொடைரோடு, வத்தலகுண்டு ஆகிய பகுதிகளில் இருந்து மல்லிகைப் பூவும், ஆரல்வாய்மொழி, குமாரபுரம், ஆகிய பகுதிகளில் இருந்து பிச்சி பூவும், ஓசூரில் இருந்து மஞ்சள் கிரேந்தி, பட்டர் ரோஸ் ஆகியவையும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

மார்க்கெட்டில் இருந்து, திருவனந்தபுரம் வழியாக வெளிநாடுகளுக்கும், பிற மாவட்டங்களுக்கும் பூக்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது கார்த்திகை மாதம், ஐயப்ப சீசன், திருகார்த்திகை விழா ஆகிய காரணங்களால் பூக்களின் தேவை அதிகரித்து விலையும் உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் முதல் விலை கிடுகிடுவென உயர்ந்து காணப்பட்டது.

மல்லிகைப்பூ நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.700க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று மேலும் 200 உயர்ந்து ரூ.900க்கு விற்பனையானது.

பிச்சி பூ நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.500 க்கும், நேற்று ரூ.750க்கும் விற்பனையானது. ரோஜா ஒரு பாக்கெட் ரூ.10ல் இருந்து ரூ.15 ஆகவும், சம்பங்கி கிலோ ரூ.100ல் இருந்து ரூ.150 ஆகவும், கிரேந்தி கிலோ ரூ.80ல் இருந்து ரூ.100 ஆகவும் உயர்ந்தன.